சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திருமதி.A.பர்சத் பேகம் பிஏ.எம்.எல்.,**

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 -ம் நாள், திங்கட்கிழமை.

I.A.No.1/2025

in

H.M.O.P.No.33/2024

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தாலுகா, கலியாவூர், காலாங்கரை கிராமம், நடுத்தெரு, கதவு எண்.7/20A ல் வசிக்கும் கண்ணன் அவர்கள் குமாரத்தி கல்யாணி

.......... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, தில்லைகூத்தனார் தெரு, கதவு எண்.1/1B என்ற விலாசத்தினை பூர்வீகமாகக் கொண்டு வேலையின் காரணமாக தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகா தாலம்பூ தெரு, 2 வது குறுக்குத்தெரு, என்.ஜி.ஓ காலனி, தரைதளம், கதவு எண்.4/146/1 என்ற முகவரியில் வசிக்கும் ரத்தினவேல் அவர்கள் குமாரர் இந்து வயது உள்ள ஜெயகணேஷ்

--- எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது, மாதவீட்டுவாடகை, உணவு, உடைக்கு மாதம் ரூ.12,000/-மும் குழந்தைக்கான உணவு உடை மற்றும் மருத்துவச்செலவுகள் என மாதம் ரூ.18,000/-மும் மொத்தம் ரூ.30,000/-த்தை இடைக்கால மாத ஜீவனாம்சமாகவும், மேலும் வழக்கு நடத்துவதற்கான செலவீனமாக ரூ.30,000/-த்தையும் மனுதாரரின் கணவரிடமிருந்து வசூலித்து தரும்படி உத்தரவிட வேண்டி பிரிவு 24 இந்து திருமண சட்டப்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் 28.032025, (சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்)

நீதிமன்ற முத்திரை கட்டணம் - ரூ.20/-

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 06.10.2025 தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.அங்கப்பன் அவர்களும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அனந்தசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1 முடிவில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2 மனுதாரர் மற்றும் அவரது குழந்தைக்காகவும் மாதாந்திர ஜீவனாம்சமாக ரூ.10,000/- (மட்டும்) எதிர்மனுதாரர் ஒவ்வொரு ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் நேரடியாகவோ, பணவிடை மூலமாகவோ அஞ்சல் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது வேறு சரியான நடவடிக்கை மூலமாகவோ வழங்கிட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

3 மனுதாரருக்கு வழக்கு செலவுத்தொகையாக ரூ.5,000/-ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 -ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

**சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்**

I.A.No.1/2025

**இன்**

H.M.O.P.No.33/2024

**உத்தரவாணை**

நாள் **13.10.2025**